பக்கங்கள்:-25

# காலை முரசு

| முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | மார்கழி 06 | செவ்வாய்க்கிழமை | 23.12.2025 | அதிர்வு 145 |
| --- | --- | --- | --- | --- | --- |

## நுகேகொடையில் துப்பாக்கிச்சூடு!

### இளைஞர் ஒருவர் படுகாயம்

நுகேகொடையில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் 06



# இலங்கை வந்தார் ஜெய்சங்கர்

## இன்று அவர் பல தரப்பினருடன் சந்திப்பு முக்கிய அறிவிப்புகளும் வெளியாகும்

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்பிரமணியம் ஜெய்சங்கர் நேற்று மாலை இலங்கை வந்தடைந்தார்.

கட்டுநாயக்க விமான நிலையம் வந்த அவரை, சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் ருவான் ரணசிங்க வரவேற்றார். இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவும் வரவேற்பு நிகழ்வில் பங்கேற்றிருந்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் விசேட தூதுவராக இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

ஒரு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை 07

# இராணுவ அதிகாரியை ஆதரித்து சிறீதரன் எதற்காக வாக்களித்தார்?

## தமிழ் மக்களுக்கு அவர் உரிய விளக்கம் தர வேண்டும் முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் வற்புறுத்து



**இலங்கை இராணுவத்தின் அதிகாரியை நாட்டின் கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு நியமிப்பதற்கு ஆதரவாக சிவஞானம் சிறீதரன்எம்.பி.வாக்களித்தமைகுறித்து இலங்கைமனித உரிமைகள் ஆணையத்தின் முன்னாள் ஆணையர் அம்பிகா சற்குணநாதன் கேள்வி எழுப்பியுள்ளார்.** 06






இலங்கை இராணுவத்தின் அதிகாரியை நாட்டின் கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு நியமிப்பதற்கு ஆதரவாக அரசமைப்புக் கவுன்ஸிலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிவஞானம் சிறீதரன் எம்.பி. வாக்களித்தமை குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணையத்தின் முன்னாள் ஆணையர் அம்பிகா சற்குணநாதன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த விவகாரத்தில் சிறீதரன் எம்.பியின் செயற்பாடு தொடர்பில் தவறான தகவல்கள் வெளியே பரப்பப்படுகின்றன என்று ஒரு பிரசாரம் முன்னெடுக்கப்படுகின்றது. இது, சிறிதரனின் அல்லக்கைகளின் பீற்றலாக இருக்கக் கூடும்.

அத்தகைய பிரசாரத்தை முன்னெடுப்போர் ஒரு விடயத்தை புரிந்து கொள்ள வேண்டும்.

நிறைவேற்றதிகாரம் மற்றும் நாடாளுமன்ற அதிகாரங்களை ஒரு கட்டமைப்பில் வைத்திருப்பதற்காக – check and balance ஆக – அரசமைப்பில் கொண்டுவரப்பட்டதுதான் அரசமைப்புக் கவுன்ஸில். அதன் ஏற்பாடுகள், 06



## என்.பி.பியின் ஆளுகைக்குட்பட்ட

# கொழும்பு மாநகர சபையின் ‘பட்ஜட்’ நேற்று தோற்கடிப்பு!

தேசிய மக்கள் சக்தியின் வசமுள்ள கொழும்பு மாநகர சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் 3 மேலதிக வாக்குகளால் தோல்வியடைந்துள்ளது.

வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 57 வாக்குகளும், எதிராக 60 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன.

2025 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தொடர்ந்து, கொழும்பு மாநகர சபையில் புதிய நிர்வாகம் அமைக்கப்பட்டது.

இந்தத் தேர்தலில் 36.92 சதவீத வாக்குகளைப் பெற்ற தேசிய மக்கள் சக்தி 48 ஆசனங்களைக் கைப்பற்றி முன்னிலை பெற்றது. எனினும், 117 உறுப்பினர்களைக் கொண்ட சபையில் எந்தத் தரப்பும் தனித்து ஆட்சியமைக்கத் தேவையான அறுதிப் பெரும்பான்மையைப் பெறாத நிலையில், தேசிய மக்கள் சக்தி ஏனைய சில தரப்புகளின் ஆதரவுடன் சபையின் ஆட்சியைப் பொறுப்பேற்றது.

ஐக்கிய மக்கள் சக்தி 29 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 13 ஆசனங்களையும் பெற்று முறையே அடுத்தடுத்த இடங்களைப் பிடித்தன.

வட்டார ரீதியாக 66 உறுப்பினர்களும், விகிதாசார முறையில் 51 உறுப்பினர்களும் என மொத்தம் 117 உறுப்பினர்களைக் கொண்ட இந்தச் சபை, 2025 ஜூன் மாதம் தனது முதலாவது அமர்வை ஆரம்பித்தது.

கொழும்பு மாநகரசபை என்பது முக்கியத்துவமிக்க சபையாகக் கருதப்படுகின்றது. அங்கு ஏற்பட்டுள்ள பின்னடைவானது தேசிய மக்கள் சக்திக்குப் பலத்ததொரு அரசியல் அடியாகும் என அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வரவு - செலவுத் திட்டத்தை மீண்டும் முன்வைப்பதற்குரிய சந்தர்ப்பம் உள்ளது. எனவே, அதன்போது பாதீட்டை நிறைவேற்றுவதற்குரிய முழுமையான நடவடிக்கையில் தேசிய மக்கள் சக்தி இறங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது

# ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் சிக்கினார்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் ஐஸ் போதைப் பொருளுடன் இளைஞன் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

நல்லூர் மூத்த விநாயகர் கோயிலடியைச் சேர்ந்த இளைஞரே 2 கிராம் 120 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி இளைஞரைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.





# வவுனியாவில் மாணவர்களுக்கு நாமல் கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

(கி.வசந்தன்)

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ வவுனியாவில் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை நேற்று வழங்கி வைத்தார்.

வவுனியா, ஈரப்பெரியகுளத்தில் அமைந்துள்ள ஸ்ரீசைலபிம்பராமய விகாரையில் அமைந்துள்ள மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வாக விகாரையின் விகாராதிபதி அழுத்தகம இந்திர சாரரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ் ஆசி பெற்றமையுடன் அவருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். இந்நிகழ்வில் பொதுஜன பெரமுனவின் கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள்மற்றும்மாணவர்கள், பொதுமக்கள்எனப்பலரும்கலந்து கொண்டிருந்தனர்.



















# கற்பிட்டி பிரதேச செயலகத்திற்கு முன் இடம்பெற்ற கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்

**(கற்பிட்டி நிருபர் சியாஜ்)**

கற்பிட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் அனர்த்த நிவாரண பணிகளில் ஈடுபட்டிருந்த வேளையில் ஆலங்குடா மற்றும் நிர்மல்புர கிராம சேவையாளர்கள் பிரிவுகளின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இருவர் தாக்கப்பட்டமையையும் மற்றும் கிராம உத்தியோகத்தர்களை அச்சுறுத்தும் செயல்பாடுகளையும் கண்டிக்கும் முகமாக நேற்று திங்கட்கிழமை கற்பிட்டி பிரதேச செயலகத்திற்கு முன்பாக கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கற்பிட்டி பிரதேச செயலகத்தின் அனைத்து பிரிவின் அலுவலர்களும் ஒன்றிணைந்து சுமார் 30 நிமிடம் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கற்பிட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 31 கிராம சேவையாளர் பிரிவுகளில் கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மேற்கொண்டு வந்த அனர்த்த முகாமைத்துவ வேலைத்திட்டம் தொடர்பாக பல்வேறு எதிர்ப்பலைகள், கடமைக்கு இடையூறு விளைவித்தமை, அச்சுறுத்தப்பட்டமை என்பவற்றிற்கு மத்தியில் கடமையாற்றி வந்த நிலையில் ஆலங்குடா மற்றும் நிர்மல்புர ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இருவர் தாக்கப்பட்டனர்.

அதையடுத்து கடந்த வெள்ளிக்கிழமை முதல் கற்பிட்டி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட 31 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் உள்ள கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அனர்த்த நிவாரணம் தொடர்பான சகல வேலைத்திட்டங்களில் இருந்தும் விலகிக் கொள்வதாக அறிவித்திருந்தமையும் இவர்களின் இந்த அனர்த்த நிவாரணம் பணி புறக்கணிப்பு நேற்று திங்கட்கிழமையும் தொடர்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் ஊடாக அரச அதிகாரிகளின் வேலைகளுக்கு இடையூறு விளைவித்தல், அச்சுறுத்தல் விடுவது மற்றும் தாக்குதல் நடத்துவது நிறுத்தப்பட வேண்டும், தாக்குதல் நடத்தியவர்களைக் கைது செய்து சட்டத்திற்கு முன் நிறுத்தித் தண்டனை வழங்க வேண்டும், இவ்வாறான சம்பவங்கள் உடன் நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டையும் குறிப்பிடத்தக்கது.









# மிலேச்சத்தனமான முறையில் வேலன் சுவாமியை கைது செய்தமைக்கு சைவ மகா சபை கண்டனம்



தையிட்டி சட்டபூர்வமற்ற விகாரை விவகாரத்திற்காக சாத்வீகமான முறையில் போராட்டம் நடைபெற்றபோது சைவ சமயத்தலைவர்களில் ஒருவரான நல்லூர சிவகுரு ஆதீனம் தவத்திரு வேலன் சுவாமிகள் மிக மிலேச்சத்தன மான முறையில் கைது செய்யப்பட் மையை சைவ மகா சபை வன்மையாக கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

வணக்கத்துக்குரிய மதத்துறவி மீது மிக மோசமான நடத்தையை காண்பித் தமை மிகவும் பாரதூரமான தவறாகும். இலங்கையில் உள்ள அனைத்து மதத் தலைவரைகளையும் சமனாக மதிக்க வேண்டிய, சட்டத்தை நிலைநாட்ட வேண்டியவர்கள் ஒரு தலைபட்சமாக, சட்டரீதியற்ற முறையில், தனியார் காணியில் அடாத்தாக நிறுவப்பட்டுள்ள ஒரு மதக்கட்டடத்திற்காக அதனை எதிர்த்து போராடிய அநத பிரதேசத்து மதத்தலைவரை, மிலேச்சத்தனமாகத் தள்ளிச் சென்று வாகனத்தில் ஏற்றிக் கைது செய்தமை எமது சமயத்தை அவ மதித்த செயலாகவே பார்க்கின்றோம்.

இந்த விடயத்தில் அரசு உடனடியாக பக்கச்சார்பற்ற விசாரணை முன்னடுத்து சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை வேண்டும்.

எதிர்காலத்தில் இவ்வாறான எமது சமயத்தலைவர்களை அவமதிக்கும் செயலை முற்றுமுழுதாக நிறுத்துவதற்கு உறுதி அளிக்க வேண்டும் ஏன சைவ சமய மக்கள் சார்பாக அகில இலங்கை சைவ மகா சபையினராகிய நாம் ஆழ மாக வலியுறுத்தி நிற்கின்றோம். - என்று அந்த அறிக்கையில் அகில இலங்கை சைவ மகா சபை தெரிவித்துள்ளது.

# வேலன் சுவாமிகள் கைது செய்யப்பட்ட முறைமை தென் கயிலை ஆதீன முதல்வரும் கடும் கண்டனம்



தையிட்டி சட்டபூர்வமற்ற விகாரை விவகாரத்திற்காக சாத்வீகமான முறையில் போராட்டம் நடைபெற்றபோது சைவ சமயத்தலைவர்களில் ஒருவரான யாழ் நல்லூர் சிவகுரு ஆதீனம் தவத்திரு வேலன் சுவாமிகள் மீது பலாத்காரம் பிரயோகிக்கப்பட்டு பொலிஸாரின் மோச மான நடத்தை மூலம் கைது செய்யப் பட்டமையை தென் கயிலை ஆதீனமும் மிக வன்மையாகக் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளது.

இது தொடபில் திருகோணமலை தென் கயிலை ஆதீனத்தின் ஆதீன முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளவை வருமாறு:-

வணக்கத்துக்குரிய மதத் துறவி மீது மிக மோசமான நடத்தையை காவல்துறை யினர் காண்பித்தமை மிகவும் அநாகரி கமான, அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும், இந்த நாட்டின் சைவ சமயத்தவர் அனைவரையும் புண்படுத்தும் நடவடிக் கையாகும்.

இலங்கையில் உள்ள அனைத்து மதத் தலைவரைகளையும் சமனாக மதிக்க வேண்டிய காவல்துறை ஒரு தலைப்பட்சமாக நடந்து கொள்வதும் இந்த மண்ணின் மைந்தர்களான மதத் ததலைவர்களை மலேச்சத்தனமாக நாடத்துவதும் உண்மையை நேசிக்கும் அனைவராலும் ஜீரணிக்க முடியாத செயலாகும்.

சட்டத்தை நிலைநாட்ட வேண்டியவர் கள், ஒரே தலைப்பட்சமாக, சட்டரீதியற்ற முறையில் தனியார் காணியில் அடாத்தாக நிறுவப்பட்டுள்ள ஒரு மதக்கட்டடத்திற்காக, அதனை எதிர்த்து போராடிய சைவசமயத் துறவியை மிலேச்சத்தனமாக தள்ளிச் சென்று வாகனத்தில் ஏற்றிக் கைது செய்தமை எமது சைவ சமயத்தை ஒரு பொருட்டாக மதிக்காது அவமதித்த செயலாகவே கருதவேண்டியுள்ளது

இந்த விடயத்தில் ஜனாதிபதியும் மத விவகார மற்றும் சட்டம் ஒழுங்கு அமைச் சரும் உடனடியாக பக்கச்சார்பற்ற விசார ணைக்கு உதத்ரவிட்டு, அதனை முன்னெடுத்து, சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை வேண்டும் என இலங்கையின் சைவ சமய ஆதீன முதல் வர்களில் ஒருவர் என்ற வகையில் ஆணித்தரமாக வலியுறுத்துகின்றோம்.

எதிர்காலத்தில் இவ்வாறான எமது சமயத்தலைவர்களை அவமதிக்கும் செயலை முற்றுமுழுதாக நிறுத்துவதற்கு உறுதியான நடவடிக்கைகளுக்கு வழி செய்ய வேண்டும் என கோருகின்றமையு டன், இன, மதங்களிடையே அதன் மூலம் மாத்திரமே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றோம்.

அதே நேரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள தவத்திரு வேலன் சுவாமிகளை நலம்பெற இறை சிவனைப் பிரார்த்திப்பதோடு எம் அனைவரது அன் பையும் ஆதரவையும் சுவாமிகளுக்கு திருகோணமலை தென் கயிலை ஆதீனம் சார்பாக வெளிப்படுத் நிற்கின் றோம்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போக்குகள், நடைமுறைகள் ஒளிவு மறைவாகச் செய்யப்படக்கூடியவை அல்ல. மக்களுக்கு அவற்றின் செயற்பாட்டை அறியும் முழு உரிமையும் உரித்தும் உண்டு. ஆகவே அந்தக் கூட்டங்களில் நடைபெற்ற விடயங்கள் தொடர்பில் கூட்ட அறிக்கைகளை மக்கள் கோரினால் அவற்றை வழங்க வேண்டியது அரசமைப்பு கவுன்ஸிலின் கடப்பாடு. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் அது மக்களுக்குரிய உரிமையாகும்.

ஆகவே அரசமைப்பு கவுன்ஸிலின் கூட்ட அறிக்கைகள் ஆக கவுன்ஸில் உறுப்பினர்களுக்கு மாத்திரம்தான் உரியவை, பொது மக்களுக்கு உரியவை அல்ல என்று யாரேனும் கருதுவார்களாயின் அது தவறாகும்.

ஆகவே அரசமைப்புக் கவுன்ஸிலில் இடம் பெற்ற விடயங்கள் தொடர்பில் ஊடகங்கள் பொய்யுரைப்பதோ அல்லது சம்பந்தப்பட்ட கவுன்ஸிலின் உறுப்பினர் திரித்துக் கூறுவதோ சாத்தியமற்றது என்பதுதான் உண்மையான நிலைப்பாடாகும்.

இந்த விடயத்தில் முரசு உட்பட எந்த ஊடகமாவது தவறாக செய்தி வெளியிட்டுள்ளது என்று கூறுகின்ற அல்லது அதனை சவாலுக்கு உட்படுத்துகின்ற கவுன்சில் உறுப்பினரோ அல்லது அவரது ஆதரவாளர்களோ அல்லது வேறு ஒருவரோ அவர் கூறுகின்ற தவறு இருக்குமாயின் அதனை கவுன்சிலின் கூட்ட அறிக்கைகளின் பிரதிகள் மூலம் நிரூபிக்க முடியும்.

இவ்விவகாரத்தை ஒட்டி முரசில் வந்த செய்திகள், தகவல்கள் தவறு என்று சவாலுக்கு உட்படுத்துபவர்கள், சம்பந்தப்பட்ட கூட்டங்களின் அறிக்கைகளைப் பெற்று அதனை உறுதிப்படுத்துமாறு நாங்கள் பதில் சவால் விடுகிறோம்.

அரசமைப்புக் கவுன்ஸிலின் உறுப்பினராக அந்தக் கூட்டங்களின் பல முடிவுகளில் சிறிதரன் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பாராயினும் அண்மை காலத்தில் நான்கு முடிவுகளில் அடுத்தடுத்து அரசு தரப்புக்கு ஆதரவாகவே அவர் எடுத்த நிலைப்பாடுகள் சர்ச்சைக்குரியவையாக மாறி இருக்கின்றன.

முதலாவது விடயம் – லஞ்ச,ஊழல் தடுப்பு ஆணைக் குழுவின் இயக்குனர் நாயகத்தின் நியமன விடயத்தில் சிறந்த – தெளிவான – தகுதியுடைய பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் மாதவ தென்னக்கோன் இருக்கத்தக்கதாக, அரசுத் தரப்பு பிரேரித்த நீதவான் ரங்க திஸநாயக்க என்பவருக்கு ஆதரவாக கவுன்ஸிலில் சிறிதரன் வாக்களித்திருந்தார். இந்தப் பதவிக்கு குறைந்தபட்சம் 15 வருடங்கள் வழக்குத் தொடுநராகப் பணியாற்றிய முன்அனுபவம் இருக்க வேண்டும் என்ற அடிப்படை அறிவிக்கப்பட்ட பின்னணியில், அதிலும் கூடிய காலம் அனுபவம் உள்ள பிரதி சொலிஸிட்டர் ஜெனரலுக்குப் பதிலாக, வழக்குகளைத் தொடுத்து செயற்படும் விடயத்திலும் அனுபவமே இல்லாத ஒரு நீதிவானை அரசு தரப்பு அந்தப் பதவிக்கு தெரிவு செய்வதற்கு சிறிதரன் எம்.பி. நேரடியாக உதவி இருக்கிறார்.

இரண்டாவது – விடயம் நீதியரசர் லவ்வார் தாஹீரை மேன்முறையீட்டு நீதிமன்ற பதில் தலைமை நீதியரசராக நியமிக்கஅரசுடன்சேர்ந்துசிறிதரன்வாக்களித்தமை.

இந்த லவ்வார் தாஹீரை உயர்நீதிமன்ற நீதியரசர் நியமனத்துக்கோ, மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசர் மற்றும் பதில் தலைமை நீதியரசர் பதவிகளுக்கோ தான் ஒருபோதும் பரிந்துரை செய்ய மாட்டேன் என்று அச்சமயத்தில் பெரிதும் மதிக்கப்பட்ட பிரதம நீதியரசர் முருது பெர்னாண்டோ அம்மையார், அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு எழுத்து மூலம் அறிவித்த பின்னரும் லவ்வார் தாஹிரை மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைமை நீதியரசராக நியமிக்க, ஆளும் தரப்புடன் சேர்ந்து சிறிதரன் வாக்களித்தமை.

மூன்றாவது – யுத்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடுகளை வழங்கும் ஐவர் கொண்ட குழுவுக்கு நான்கு பேரை தெரிவு செய்வதில் படைத்தரப்பினருக்கு ஆதரவாக அரசுப் பக்கத்துடன் சேர்ந்து சிறிதரன் வாக்களித்தமை.

ஏற்கனவே அந்த இழப்பீட்டுக் குழுவில் மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ ஓர் உறுப்பினராக இருக்கிறார். எஞ்சிய நால்வரைத் தேர்வு செய்வதற்கான நேர்முகத் தேர்வு குழுவிலும் ஓர் அங்கத்தவராக இருந்து மேற்படி படைத்தரப்புடன் தொடர்புடைய இருவரை அந்தப் பதவிக்கு தெரிவு செய்து, பின்னர் ஜனாதிபதியினால் அவர்கள் நியமிக்கப்படுவதற்கு வசதியாக, அவர்களையும் அரசு தரப்புடன் சேர்ந்து கவுன்ஸிலில் தெரிவு செய்தமை.

நான்காவதாக இப்போது நாட்டின் கணக்காய்வாளர் நாயகமாக இராணுவத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கும் கேணல் ஒருவரை ஜனாதிபதி பரிந்துரைக்க, அவருக்கு ஆதரவாக அரசமைப்பு கவுன்ஸிலில் சிறிதரன் வாக்களித்தமை.

– இவ்வாறு சர்ச்சைக்குரிய முறைகளில் ஆளும் தரப்புடன் சேர்ந்து தொடர்ந்து சிறிதரன் வாக்களித்து வருகின்றமை அவருக்கு எதிரான காட்டமான கருத்துக்களை ஏற்படுத்தி வருகின்றது.

தமிழர் வாழ்வியலில் இராணுவத் தலையீட்டை அடியோடு எதிர்க்கும் தமிழ்த் தேசியவாதியாகத் தன்னை காட்டிக்கொள்கின்ற சிறிதரன், இப்படி அரசு தரப்புடன் சேர்ந்து வாக்களித்தமை தொடர்பில் மக்களுக்கு – தமிழ் மக்களுக்கு – சிறிதரன் உரிய விளக்கம் தர வேண்டும் என்று முன்னாள் மனித உரிமைகள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் வலியுறுத்துகின்றார். அதில் நியாயம் இருப்பதாகவே தோன்றுகின்றது.

சிறிதரன் விளக்கம் கொடுக்கத் துணிவாரா? பார்ப்போம்!

---

## இராணுவ அதிகாரி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“அரசமைப்பு கவுன்ஸிலின் உறுப்பினரான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் எம்.பி. சிவஞானம் சிறீதரன், இராணுவ அதிகாரி ராஜசிங்கவை கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு நியமிப்பதற்கு ஆதரவாக வாக்களித்தார். இது உண்மையாக இருந்தால், எம்.பி. சிறீதரன் தனது வாக்களிப்புக்கான காரணத்தை தமிழ் மக்களுக்கு விளக்க வேண்டும்.”– என்று அம்பிகா சற்குணநாதன் ‘எக்ஸ்’ இல் ஒரு பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அப்படி வாக்களித்தார் என்ற செய்தி அறிக்கை உண்மையாக இருந்தால் – இராணுவ மயமாக்கல் மற்றும் தமிழர்களின் உரிமைகள் மீதான அதன் பாதகமான தாக்கம் ஆகியவை குறித்து எம்.பி. சிறீதரன் இதுவரை பகிரங்கமாகக் கூறிய அனைத்தையும் அது கேள்விக்குள்ளாக்குகின்றது என்றும் அவர் மேலும் கூறினார்.

“இந்த நியமனம் (இராணுவ அதிகாரியை இந்தப் பதவிக்கு நியமிப்பது) நாட்டுக்குத் தீங்கு விளைவிக்கும். ஏனெனில் இது கணக்காய்வாளர் நாயகத்தின் அலுவலகத்தின் சுதந்திரத்தையும், நல்லாட்சியையும், இராணுவமயமாக்கலையும் குறைமதிப்புக்கு உட்படுத்தியிருக்கும்.

முந்தைய சட்ட அதிகாரிகள் நிதி விரயம், தவறான மேலாண்மை மற்றும் இராணுவத்தால் ஏற்படக்கூடிய ஊழல் ஆகியவற்றைக் கண்டறிந்தனர். இந்த உண்மைகளின் வெளிச்சத்தில், இந்த நபருக்கு நீங்கள் ஏன் வாக்களிக்க வேண்டும்? “அமைப்பு மாற்றம்“ என்பது இதுவல்ல.” – என்றும் அவர் மேலும் கூறினார்.

நாட்டின் அடுத்த கணக்காய்வாளர் நாயகமாகப் பொறுப்பேற்க ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பரிந்துரைத்த கேணல் ஓ.ஆர். ராஜசிங்கவின் பெயரை அரசமைப்புச் சபை நிராகரித்ததாக அறிவிக்கப்பட்டதை அடுத்து, இலங்கை மனித உரிமைகள் ஆணையத்தின் முன்னாள் ஆணையர் அம்பிகா சற்குணநாதன் இந்த நியமன முயற்சி குறித்துக் கவலைகளை எழுப்பினார்.

எட்டு மாதங்களில் நான்காவது முறையாக பதில் அல்லது நிரந்தர கணக்காய்வாளர் நாயகமாகப் பணியாற்ற ஜனாதிபதியால் முன்மொழியப்பட்ட பரிந்துரைகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

ராஜசிங்க இலங்கை இராணுவத்தில் பணியாற்றும் அதிகாரியும், இராணுவத்தின் தணிக்கைப் பிரிவின் உறுப்பினருமாவார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற அரசமைப்புக் கவுன்ஸிலின் கூட்டத்தின் போது, பிரதமர் ஹரிணி அமரசூரியவால் அவரது பெயர் அரசமைப்புக் கவுன்ஸிலின் முன் சமர்ப்பிக்கப்பட்டது. சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் நடைபெற்ற அரசமைப்புக் கவுன்ஸிலின் கூட்டத்தில், ஜனாதிபதி பரிந்துரைத்தவருக்கு ஆதரவாக நான்கு உறுப்பினர்கள் மட்டுமே வாக்களித்தனர், ஐந்து பேர் எதிராக வாக்களித்தனர்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா ஆகியோருடன் மூன்று சிவில் சமூக உறுப்பினர்களும் ஜனாதிபதி பரிந்துரைத்தவருக்கு எதிராக வாக்களித்தனர். பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் சபைத் தலைவர் பிமல் ரத்நாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.அதம்பவா மற்றும் சிவஞானம் சிறீதரன் ஆகியோர் அவருக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

---

## நுகேகொடையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு 8.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

நுகேகொடை சந்தியில் இருந்து கொஹுவல நோக்கிச் சென்ற ஓட்டோ ஒன்றில் பயணித்தவர்களை இலக்கு வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்த இனந்தெரியாத இருவரால் இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த 25 வயது இளைஞர் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான தீவிர விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இலங்கை வந்தார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வந்துள்ள அவர், இன்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் ஹரிணி அமரசூரிய உள்ளிட்ட உயர்மட்டத் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

டித்வா சூறாவளி பேரிடரால் பாதிக்கப்பட்ட இலங்கை மீண்டெழுவதற்குரிய உதவித் திட்டங்கள் பற்றி இந்திய வெளிவிவகார அமைச்சர் அறிவிக்கவுள்ளார்.

இந்த ஒருநாள் விஜயத்தில் அவர் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்டோரையும் சந்திக்கவுள்ளார்.



# பருத்தித்துறை நகரசபை எல்லைக்குள் டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்றிட்டம்







பருத்தித்துறை நகரசபையின் எல்லைக்குட்பட்ட பிரசேசங்களில் டெங்கு கட்டுப்பாட்டு செயற்றிட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

பருத்தித்துறை நகரசபையினர், பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர், பருத்தித்துறை பிரதேச செயலகத்தினர், மற்றும் பருத்தித்துறை பொலிஸாரும் இணைந்து வீடுகள் தோறும் களத்தரிசிப்பு மேற்கொண்டனர்.

இதன் போது 146 இடங்கள் நுளம்பு பரவக்கூடிய சூழலாக இனங்காணப்பட்டதுடன், 24 ஆதன உரிமையாளர்களுக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டது.

நுளம்பு குடம்பிகளுடன் சுற்றாடலினை பேணிய 10 குடியிருப்பாளர்களிற்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இழுபடும் சட்டம்

கடந்த 47 ஆண்டுகளாக நாட்டில் நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் மிகவும் மோசமானது, மனித குல நாகரிகத்திற்கு முரணானது, காட்டுமிராண்டித்தனமானது என்றெல்லாம் சர்வதேச மட்டங்களிலேயே அது, கடும் விமர்சனத்துக்கும் கண்டனத்திற்கும் உள்ளாகி வரும் பின்புலத்தில், தொடர்ந்து இவ்விவகாரம் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலிலும் சர்ச்சைக்குரியதாக எழுப்பப்பட்டு வருகிறது.

இந்தப் பின்னணியில் கடந்த செப்டம்பரில் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் கூட இருந்த சமயத்தில், அங்கு எழக்கூடிய அழுத்தங்களைச் சமாளிப்பதற்காக, அந்தக் கூட்டத்திற்கு முன்னரே, இதோ பழைய பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை நீக்கி, அதற்கு மாற்றீடாக- புதிதாக- பயங்கரவாதத் தடைச்சட்டம் வருகிறது, அதற்கான சட்டமூலம் அந்த மாதமே வந்துவிடும் என்று அறிவிப்புகள் எல்லாம் இலங்கை அரசுப் பக்கத்தில் இருந்து வந்தன.

இப்போது வருட முடிவில்தான் அந்தச் சட்டமூலம் நீதி அமைச்சின் இணையத் தளத்தில் மூன்று மொழிகளிலும் பதிவேற்றப்பட்டிருக்கின்றது.

ஆயினும், "இது இறுதியானது அல்ல. இவ்விடயத்தில் பொதுமக்களின் கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் தேவையான திருத்தங்களை செய்ய வேண்டியுள்ளது. அது தொடர்பில் பெப்ரவரி 28 வரை மக்கள் தங்கள் கருத்துக்களையும் பரிந்துரைகளையும் சமர்ப்பிக்கலாம்.'' என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார கூறியிருக்கிறார்.

பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களின் கருத்துக்கள் மற்றும் பரிந்துரைகளைப் பரிசீலித்து, அவற்றின் அடிப்படையில் சட்டமூலம் மீண்டும் திருத்தப்பட்டு, ஒழுங்கமைக்கப்பட்ட பின்னரே அது அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் என்று நீதி அமைச்சர் இப்போது கூறி இருக்கிறார்.

பொதுமக்களின் கருத்துகள் மற்றும் பரிந்துரைகளின் அடிப்படையில் தேவையான திருத்தங்களைச் செய்வதற்காக சட்டமூலத்தை வரைந்த அதே குழுவிடம் பொதுமக்களின் கருத்துகளும் பரிந்துரைகளும் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மிகவும் உணர்திறன் வாய்ந்த சட்டத்தை வரைவதில் இது முக்கியமானது என்பதால், தனிநபர்கள், குழுக்கள் அல்லது அமைப்புகள் தங்கள் பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறு அமைச்சர் அழைப்பு விடுத்தார்.

இந்தப் போக்கில் பார்த்தால் தற்போது நடைமுறையில் இருக்கும் சட்டம் அரை நூற்றாண்டு தாண்டியும் நாட்டில் தொடரும் என்றே தோன்றுகின்றது.

தற்போதுள்ள சட்டம் முழுமையாக ஒழிக்கப்பட வேண்டும், அதற்கு மாற்றீடு தேவையே இல்லை என்று தேர்தலுக்கு முன்னர் கூறி வந்த ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவும் அவரது அரசுத் தரப்பினரும் அந்த முடிவிலிருந்து அடியோடு குத்துக்கரணம் அடித்து விட்டுள்ள சூழ்நிலையில், இருக்கும் சட்டம் நீக்கப்படுவது அல்லது பொருத்தமான பதில் சட்டம் கொண்டு வரப்படுவது இப்போதைக்கு சாத்தியம் இல்லை என்றே தோன்றுகின்றது.



# வெள்ள அனர்த்தப் பாதிப்புத் தொடர்பில் நேற்று முல்லைத்தீவில் கலந்துரையாடல்

**(விஜயரத்தினம் சரவணன்)**

அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தம் தொடர்பிலான விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமொன்று நேற்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபாலவின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற இந்த அனர்த்த பாதிப்புத் தொடர்பான இந்த விசேட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இடம்பெற்ற வெள்ள அனர்த்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்கள் மற்றும் அவற்றைச் சீரமைப்புச் செய்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இக்கூட்டத்தில் வடக்குமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் நேரலையில் கலந்து கொண்டிருந்தார்.

மேலும் இக்கலந்துரையாடலில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், பத்மநாதன் சத்தியலிங்கம், உபாலி சமரசிங்க, செல்லதனதம்பி திலகநாதன், செல்வம் அடைக்கலநாதன், மயில்வாகனம் ஜெகதீஸ்வரன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி. தனுஜா முருகேசன், வடக்கு மாகாண திணைக்கள அதிகாரிகள், முல்லைத்தீவு மாவட்ட மட்ட அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.







# கிரவல் அகழ்விற்கு எதிராகப் பொது மக்கள் செட்டிகுளத்தில் நேற்று கண்டனப் பேரணி!

(கி.வசந்தன்)

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கங்கன்குளம் பகுதியில் கிரவல் அகழ்வதைத் தடைசெய்யக் கோரி நேற்றையதினம் பொதுமக்களால் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

செட்டிகுளம், கங்கன்குளம் பகுதியில் போராட்டத்தை ஆரம்பித்த மக்கள் அங்கிருந்து 3 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள செட்டிகுளம் பிரதேச செயலகம் வரை பேரணியாகச் சென்று அங்கு ஆர்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்கள் –

கிரவல் அகழ்வால் எமது கிராமமே குண்டும் குழியுமாக உள்ளது. எனவே கிராம மக்களின் விருப்பத்திற்கு மாறாக கிரவல் அகழ்விற்கான அனுமதியை வழங்குவதை அதிகாரிகள் உடனடியாக நிறுத்த வேண்டும். அத்துடன் சுற்றுச் சூழலையும் வளங்களையும் அழித்து அதற்கு எதிராக குரல் எழுப்பும் மக்களின் மீது அடக்கு முறைகளை பிரயோகிக்க வேண்டாம். கிரவல் அகழ்விற்கு எதிராகக் குரல் கொடுப்பவர்களை கைது செய்யாதே. எமது கிராமத்தைக் காப்பாற்ற அரச அதிகாரிகள் முன்வர வேண்டும். – எனத் தெரிவித்தனர்.

ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் "இயற்கையை அழிக்காதீர்கள், சட்டவிரோத கிரவல் அகழ்விற்கு தடை விதியுங்கள், எமது கிராமத்தின் வளங்கள் சுரண்டலுக்கு மாத்திரமா?"" போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்தமையுடன் கோசங்களை எழுப்பியிருந்தனர்.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்திற்கு சென்ற தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் ஆர்ப்பாட்டக்காரரின் கோரிக்கை தொடர்பில் அவர்களுடன் கலந்துரையாடினார். அவர்களது மகஜரையும் பெற்றுக் கொண்டார். அத்துடன் இது தொடர்பில் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை அரசாங்கத்தால் எடுக்கப்படும் எனவும் இதன்போது அவர் உறுதியளித்திருந்தார்.
















# கிழக்கில் நில அபகரிப்புகளுக்கு எதிராகப் போராட “நிலத்திற்காக ஒருங்கிணைவோம்” அமைப்பு உதயம்

(எஸ்.கீதபொன்கலன்)

கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் நில அபகரிப்புகளால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் பிரதிநிதிகள் இணைந்து கடந்த ஞாயிறன்று ”நிலத்திற்காக ஒருங்கிணைவோம்““ என்ற பெயருடன் சுயாதீன செயலணி ஒன்றை உருவாக்கி உள்ளனர்.

திருகோணமலையில் ஒன்று கூடிய அம்பாறை, மட்டக்களப்பு,திருகோணமலை மாவட்டங்களின் சார்பில் 15 பிரதிநிதிகள் இணைந்து இந்தச் செயலணி உருவாக்கப்பட்டுள்ளது.

அகம் மனிதாபிமான வள நிலையம் மற்றும் சூழலியல் நீதிக்கான மக்கள் கூட்டு ஆகிய நிறுவனங்கள் இணைந்து இந்த செயலணியை அமைப்பதற்கான வழிகாட்டல்களை வழங்கியிருந்தன.

கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக நிலவி வரும் நில அபகரிப்பு சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்குடன் இச்செயலணி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஆரம்ப நிகழ்வில் பேசிய குச்ச வெளி பிரதேச சபை அங்கத்தவர்



தனுசன் –

”திருகோணமலை மாவட்டத்தில் நிலவி வரும் நில அபகரிப்பு, சிங்கள – பௌத்த மயமாக்கல் போன்ற பிரச்சினைகள் இன்னும் பேசுபொருளாகவே இருந்து வருகின்றனவே தவிர,இதுவரை நிரந்தரமான தீர்வு எதுவும் கிடைக்கவில்லை.குறிப்பாக குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவிற்குள், தமிழ் பேசும் தமிழ் மற்றும் இஸ்லாமிய மக்களின் பூர்விக நிலங்கள் பல்வேறு காரணங்களின் பெயரில் அபகரிக்கப்படுகின்றன. இவற்றிற்கு உதாரணங்களாக தென்னமரவாடி தொல்லியல், புல்மோட்டை தொல்லியல் மற்றும் புனித பூஜா பூமி, திரியாய் தொல்லியல் மற்றும் பூஜா பூமி, வனவளத்துறை ஆகியவற்றின் பெயரால் மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்புக்களைக் கூறலாம்

“ஈழப் போருக்குப் பின்னர் நாட்டில் ஐந்து ஜனாதிபதிகள் மாறிய போதும், தமிழ்ப் பேசும் மக்களுக்கு நிரந்தரமான தீர்வுகள் இதுவரை கிடைக்கவில்லை. ஆட்சிகள் மாறினாலும், சிறுபான்மை மக்களின் நிலை மாற்றமடையவில்லை.

“கிழக்கு மாகாணத்தில் நிலவி வரும் நிலம் சார்ந்த அநீதிகளுக்கு, இந்த ஊழலற்ற ஆட்சியின் கீழ் என்றாவது ஒரு நியாயமான தீர்வு கிடைக்குமா என்ற பெரும் நம்பிக்கையுடனேயே, இன்றும் நாம் நில மீட்புக்காக ஒன்றிணைந்து போராடிக் கொண்டிருக்கிறோம்” என்று கூறினார்.







# அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் கூட்டம்

(நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலக காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் குழுக் கூட்டமம் நேற்று பிரதேச செயலகக் கேட்போர்கூட மண்டபத்தில் பிரதேச செயலாளரும், பிரதேச மட்ட காணிப்பயன் பாட்டுத் திட்டமிடல் குழுவின் தலைவருமான ஏ.சி.அஹமட் அப்கர் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் பல்வேறு திணைக்களங்கள் சார்ந்த அலுவலர்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகளுக்கேற்ப பிரதேச காணிப்பயன்பாட்டுக் குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக கையளிக்கப்படவேண்டிய, பாராதீனப்படுத்தப்பட வேண்டிய மற்றும் நீண்டகால குத்தகைக்கு வழங்கப்படவேண்டிய காணிகள் சம்பந்தமான விடயங்கள் ஆராயப்பட்டன.

தொடர்ந்து காணி பயன்பாட்டுத் திட்டமிடல் உத்தியோகத்தரும், பிரதேச மட்ட காணிப்பயன்பாட்டுத் திட்டமிடல் குழுவின் செயலாளருமாகிய கே. நவநீதனால் இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் சபையில் வாசிக்கப்பட்டன.

இதன்போது காணி உத்தியோகத்தர் எம் ஐ எம்.றியாத், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் திருமதி. அ ம.சுரையா மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# அம்பாறை மாவட்டக் கடற்கரையோரங்களில் இறந்த நிலையில் ஒதுங்கும் கடல் ஆமைகள்

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டம் மருதமுனை – கல்முனை இடைப்பட்ட பகுதிகளில் இரண்டு பெரிய கடல் ஆமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

நேற்று மதியம் கடற்கரைக்குச் சென்ற கடற்றொழிலாளர்கள் உயிரிழந்த நிலையில் ஆமைகள் கரை ஒதுங்கியுள்ளமையை அவதானித்துள்ளனர்.

கரையொதுங்கியுள்ள இரண்டு கடலாமைகளும் சுமார் 3 அடி நீளமும் 25 தொடக்கம் 50 கிலோ கிராம் எடை கொண்டவையச்கும். காலநிலையால் ஆழ் கடலில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக கடலாமைகள் கரையொதுங்கி வருகின்றன என அப்பகுதி கடற்றொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதி மக்கள் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கு இது குறித்துத் தாங்கள் அறிவித்துள்ளனர் எனத் தெரிவிக்கின்றனர்.

மேலும் இம்மாவட்டத்தின் கரையோரப் பகுதிகளில் அண்மையில் கடலாமைகள், டொல்பின்கள் உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியிருந்தமை பற்றிய செய்திகள் சமூக ஊடகங்களிலும் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மட்டக்களப்பு குருக்கள்மடம் ஏத்தாழைக்குளத்திற்கு மீண்டும் வந்துள்ள வெளிநாட்டுப் பறவை இனங்கள்

**(மட்டக்களப்பு நிருபர்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் குருக்கள்மடம் கிராமத்தில் அமையப்பெற்றுள்ள ஏத்தாழை குளம் பறவைகள் சரணாலயத்திற்கு லட்சக்கணக்கான வெளிநாட்டுப் பறவைகள் மீண்டும் தற்போது வந்துள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக குருக்கள்மடம் ஏத்தாலைக் குளத்தை அண்மித்த ஈரநிலப் பகுதிகளில் Australian White Ibis என்ற புலம்பெயர் பறவைகளே தற்போது வந்துள்ளமையைக் காணமுடிகின்றது. ஒது, அப்பகுதிக்கு மாத்திரமின்றி மட்டக்களப்பு மாவட்டத்தின் இயற்கை வனப்பிற்கு மேலும் மெருகூட்டுவதாக அமைந்துள்ளது.

இப்பறவை இனம் குறிப்பாக வருடாந்தம் டிசெம்பர், ஜனவரி மாதங்களில் இப்பிரதேசத்திற்கு இனப்பெருக்கத்திற்காக வருகை தருகின்றன. பின்னர் ஏப்ரல் மதத்தில் மீண்டும் குஞ்சுகளுடன் ஆஸ்திரேலியா நாட்டிற்குத் திருப்பிச் செல்கின்றன எனவும் சூழலியாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

இக்காலப்பகுதியில் இவ்வாறு பிரமிக்கதக்க பறவைகளின் அழமை உள்நாட்டவர்கள், வெளிநாட்டவர்கள் அப்பகுதிக்கு வருகைதந்து பார்வையிட்டுச் செல்கின்றனர்.

அப்பறவைகள் அமைந்துள்ள சரணாலயப் பகுதியிர் சிலர் பொறுப்பற்ற வித்தில் தொடர்சியாக கழிவுகளையம் வீசி வருகின்றனர். இவ்வாறு வீசப்படும் கழிவுகளை இப்பறவைகள் உண்பதால் இறந்து அழியும் அபாயகரமான சூழல் காணப்படுகிறது.

அதுபோல் இப்பறவைகளை சிலர் இறைச்சிக்காக வேட்டையாடி வருகின்றனர் எனவும், அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.









# வவுனியாவில் நேற்று நடமாடும் சேவை

(கி.வசந்தன்)

"கிளீன் சிறிலங்கா" வேலைத்திட்டத்தின் கீழான விசேட நடமாடும் சேவை வவுனியா மாவட்ட செயலக வளாகத்தில் நேற்று இடம்பெற்றது.

மாவட்டசெயலகம், வவுனியா பிரதேச செயலகம், வவுனியா தெற்கு பிரதேச செயலகம் ஆகியன இணைந்து இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்திருந்தன.

இந் நடமாடும் சேவையில் காணி அனுமதிப்பத்திரம் வழங்கி வைத்தல், காலம் கடந்த பிறப்பு இறப்பு பதிவு, மனிதவள அபிவிருத்தி தொடர்பான சேவைகள், ஜனாதிபதி செயலகத்தின் பன்முகப்படுத்தப்பட்ட சேவைகள், ஆள் பதிவுத் திணைக்களத்தின் சேவைகள், போதை ஒழிப்பு, ஊழல் ஒழிப்பு உட்பட பொது மக்களுக்கான பல்வேறு சேவைகள் முன்னெடுக்கப்பட்டன.

நிகழ்வில் முதன்மை அதிதியாக கலந்துகொண்ட கூட்டுறவு பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க உத்தியோகபூர்வமாக நிகழ்வை ஆரம்பித்து வைத்திருந்தார். இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.திலகநாதன், மாவட்ட அரசாங்க அதிபர் பி.ஏ.சரத்சந்திர, மேலதிக அரச அதிபர் நா.கமலதாசன், பிரதேச செயலாளர் இ.பிரதாபன் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் பெருமளவான பொதுமக்கள் கலந்து கொண்டிருந்தனர்.



# திருகோணமலை சந்தை வியாபாரிகளின் பிரச்சினைகள் கிழக்கு ஆளுநர் தலைமையில் நேற்று கலந்துரையாடல்

திருகோணமலை பிரதான மரக்கறி வியாபாரிகளின் சந்தையில் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பாக நேற்று கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்த லால் ரத்னசேகர தலைமையில் திருகோணமலையில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இதில் தற்போதைய நிலையில் உருவாகியுள்ள பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. அவற்றைத் தீர்ப்பதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் பரிசீலிக்கப்பட்டது.

அனைத்து தரப்பினரின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் செயல்படுவது மற்றும் நீண்டகால தீர்வுகள் குறித்து விரிவாகப் பேசப்பட்டது. மேலும் சந்தை அபிவிருத்தி மற்றும் அதற்காக எதிர்காலத்தில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவான கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடலில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, திருகோணமலை மாநகர சபை மேயர் க.செல்வராசா (சுப்ரா), முதலமைச்சின் செயலாளர், மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் மற்றும் மரக்கறி வியாபாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.







# இலங்கையின் ஏற்றுமதித் துறை 5.8 வீத வளர்ச்சியை பதிவு செய்தது

இலங்கையின் ஏற்றுமதித் துறையானது இந்த ஆண்டின் ஜனவரி முதல் நவம்பர் வரையிலான காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டியுள்ளது.

கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 5.8 சதவீத வருடாந்த வளர்ச்சியாகும் என ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

இந்த 11 மாத காலப்பகுதியில் நாட்டின் மொத்த ஏற்றுமதி வருமானம் 15,776.36 மில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளது.

அதேவேளை, நவம்பர் மாதத்தில் மட்டும் மொத்த ஏற்றுமதி வருமானம் 1,364.52 மில்லியன் அமெரிக்க டொலர்களாகப் பதிவாகியுள்ளது.

2024 ஆம் ஆண்டின் நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில் இது 5.56 சதவீத வளர்ச்சியாகும் எனவும் தரவுகள் தெரிவிக்கின்றன.

# வருவாய் இலக்கை எட்டிய இறைவரி திணைக்களம்




2025 ஆம் ஆண்டுக்காக அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட வருடாந்த வருவாய் இலக்கான 2,203 பில்லியன் ரூபாயை எட்டியுள்ளதாக இலங்கை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த 19 ஆம் திகதி இந்த இலக்கை எட்டியதாகவும், திணைக்களத்தின் வரலாற்றிலேயே ஈட்டப்பட்ட மிக உயர்ந்த வருவாய் இதுவெனவும் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் ருக்தேவி பி. எச். பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாட்களில் இதனை மேலும் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, இந்த வரலாற்றுச் சாதனைக்குத் தங்களது வரிப் பங்களிப்பின் மூலம் ஆதரவளித்த வரி செலுத்துவோருக்கு அவர் நன்றியைத் தெரிவித்துக் கொண்டதுடன், இதற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய திணைக்கள ஊழியர்கள் மற்றும் ஏனைய அரச, தனியார் நிறுவன ஊழியர்களுக்கும் தனது பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார்.

## டிட்வா சூறாவளி நிவாரணம்:

# புதிய விதிமுறைகளுடன் சுற்றுநிருபம் வெளியீடு

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட டிட்வா சூறாவளி, வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் நிதி அமைச்சு நேற்று புதிய சுற்றுநிருபம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

கடந்த டிசம்பர் 5 ஆம் திகதி வெளியிடப்பட்ட 08ஃ2025 இலக்க சுற்றுநிருபத்தில் சில திருத்தங்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களைச் செய்து இந்தப் புதிய சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

நிவாரணப் பணிகளை அதிக வினைத்திறனுடனும், வெளிப்படைத்தன்மையுடனும் முன்னெடுப்பதே இதன் நோக்கமாகும்.

இந்த நிவாரண உதவிகள் எவ்வித பாகுபாடுமின்றி தகுதியுள்ள அனைவருக்கும் கிடைப்பதை உறுதி செய்யுமாறு மாவட்டச் செயலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தப் பணிகளை ஒருங்கிணைப்பதிலும், பாதுகாப்பை உறுதிப்படுத்துவதிலும் பொலிஸ் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை. | The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: BD/NSLE/103/DMD/09/2025
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 20-12-2025

**Budget Circular No. 08/2025 (i)**

All Secretaries to Ministries
Chief Secretaries of Provincial Councils
Heads of Departments
District Secretaries/ Government Agents and Divisional Secretaries

**Program for Empowering those Affected by the Disaster**

This circular is issued in order to incorporate new additions, clarifications and amendments to the empowerment program proposed by the Budget Circular No. 08/2025 dated 2025-12-05, with the objective of ensuring more efficient and effective implementation of the same to restore the lives of the people affected by the emergency disaster situation arisen from adverse weather conditions.

02. Accordingly, the serial numbers 3, 5, 6, 7, 9, 11, 12 and 14 of the table set out in the Budget Circular No. 08/2025 are amended as follows;

| Serial number of the table as per circular 08/2025 | Proposed Relief | Allowance |
|---|---|---|
| 3 | Monthly allowance paid for maximum period of 03 months to families who are unable to continue their permanent livelihoods due to complete damage to their houses or lost their houses due to landslides and floods. | Rs. 25,000 for families with 02 or fewer members.<br>Rs. 50,000 for families with more than 02 members. |
| 5 | Payment of one-time allowance for crop damages or replanting of paddy, grains, maize, peanuts and field crops in agricultural lands affected by the disaster. | Rs. 150,000 per hectare |




# டித்வா சூறாவளியால் இலங்கைக்கு 4.1 பில்லியன் டொலர்கள் இழப்பு

## உலக வங்கி மதிப்பீடு

இலங்கையை அண்மையில் தாக்கிய "டித்வா" சூறாவளி காரணமாக, கட்டடங்கள், விவசாயம் மற்றும் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளுக்கு சுமார் 4.1 பில்லியன் அமெரிக்க டொலர் நேரடிப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக உலக வங்கி மதிப்பீடு செய்துள்ளது.

இந்த சூறாவளியினால் வீடுகள், வணிகக் கட்டடங்கள் மற்றும் அவற்றுள் இருந்த உடமைகளுக்குப் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

அத்துடன், நாட்டின் விவசாய நிலங்கள் மற்றும் பயிர்ச்செய்கைகள் இந்தச் சூறாவளியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

அதேநேரம், மின்சாரம், நீர் வழங்கல் மற்றும் போக்குவரத்து உள்ளிட்ட நாட்டின் முக்கிய உட்கட்டமைப்பு வசதிகளும் சீர்குலைந்துள்ளன.

இது தொடர்பில் உலக வங்கி முன்னெடுத்த மதிப்பீட்டுக்கமைய, இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த சேதம் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 4 சதவீதம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் சமீபத்திய வரலாற்றில் மிகவும் தீவிரமான மற்றும் அழிவுகரமான சூறாவளிகளில் ஒன்றான இந்த சூறாவளி, 25 மாவட்டங்களிலும் சுமார் 2 மில்லியன் மக்களை கடுமையாக பாதித்துள்ளது.

இலங்கையை அண்மையில் தாக்கிய "டித்வா" சூறாவளி காரணமாக, கட்டடங்கள், விவசாயம் மற்றும் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகளுக்கு சுமார் 4.1 பில்லியன் அமெரிக்க டொலர் நேரடிப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக உலக வங்கி மதிப்பீடு செய்துள்ளது.

இந்த சூறாவளியினால் வீடுகள், வணிகக் கட்டடங்கள் மற்றும் அவற்றுள் இருந்த உடமைகளுக்குப் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

அத்துடன், நாட்டின் விவசாய நிலங்கள் மற்றும் பயிர்ச்செய்கைகள் இந்தச் சூறாவளியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.


அதேநேரம், மின்சாரம், நீர் வழங்கல் மற்றும் போக்குவரத்து உள்ளிட்ட நாட்டின் முக்கிய உட்கட்டமைப்பு வசதிகளும் சீர்குலைந்துள்ளன.

இது தொடர்பில் உலக வங்கி முன்னெடுத்த மதிப்பீட்டுக்கமைய, இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த சேதம் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 4 சதவீதம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் சமீபத்திய வரலாற்றில் மிகவும் தீவிரமான மற்றும் அழிவுகரமான சூறாவளிகளில் ஒன்றான இந்த சூறாவளி, 25 மாவட்டங்களிலும் சுமார் 2 மில்லியன் மக்களை கடுமையாக பாதித்துள்ளது.






# தேசிய பொருளாதாரத்தில் மேல் மாகாணம் ஆதிக்கம்

2024 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் மாகாண மொத்த உள்நாட்டு உற்பத்தி தரவுகளின்படி, தேசிய பொருளாதாரத்தில் மேல் மாகாணம் தனது ஆதிக்கத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக் கொண்டுள்ளது.

அதேவேளை, ஏனைய மாகாணங்களும் தமது பங்களிப்பில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களின்படி, 2024 ஆம் ஆண்டில் நாட்டின் பெயரளவிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 42.4 சதவீத பங்களிப்பை மேல் மாகாணம் வழங்கியுள்ளது.

சேவைகள் மற்றும் கைத்தொழில் துறைகளில் காணப்பட்ட வலுவான செயற்பாடுகளே இந்த முதன்மை நிலைக்குக் காரணமாக அமைந்துள்ளன.

மேல் மாகாணத்தைத் தொடர்ந்து, வடமேல் மாகாணம் 11.5 சதவீத பங்களிப்புடன் இரண்டாவது இடத்தையும், மத்திய மாகாணம் 10.7 சதவீத பங்களிப்புடன் மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளன.

2023 ஆம் ஆண்டோடு ஒப்பிடுகையில் மத்திய, கிழக்கு, வடமேல், சப்ரகமுவ மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களின் பொருளாதாரப் பங்களிப்புகள் அதிகரித்துள்ளன.

இது நாடு முழுவதும் பொருளாதார நடவடிக்கைகள் பரவலாக விரிவடைந்து வருவதைப் பிரதிபலிக்கிறது. இதனிடையே, விவசாய நடவடிக்கைகளில் வடமேல் மாகாணம் முன்னிலை வகிக்கிறது.

இது தேசிய விவசாய உற்பத்தியில் 20.0 சதவீதத்தைப் பூர்த்தி செய்துள்ளது. இதனைத் தொடர்ந்து மத்திய மாகாணம் (13.9 வீதம்) மற்றும் தென் மாகாணம் (11.8 வீதம்) அடுத்தடுத்த இடங்களைப் பெற்றுள்ளன.

கைத்தொழில் நடவடிக்கைகளைப் பொறுத்தவரை, மேல் மாகாணமே அதிகம் ஆதிக்கம் செலுத்துகிறது. இத்துறைக்கான மொத்த மதிப்பில் 47.6 சதவீதத்தை மேல் மாகாணம் வழங்கியுள்ளது.

வடமேல் மாகாணம் (12.0 வீதம்) மற்றும் மத்திய மாகாணம் (9.6 வீதம்) ஆகியவை அடுத்த முக்கிய பங்களிப்பாளர்களாக உள்ளன. சேவைகள் துறையிலும் மேல் மாகாணம் முன்னிலை வகிக்கின்றது.

இது மொத்தத்தில் 44.5 சதவீதப் பங்களிப்பை வழங்கியுள்ளது. சேவை துறையில் மத்திய மாகாணம் 10.7 சதவீதத்தையும், வடமேல் மாகாணம் 10.1 சதவீதத்தையும் பங்களித்துள்ளன.

# முன்னாள் ஹொங்கொங் கிரிக்கெட் வீரர் இலங்கையில் ஒரு வாரம் சாதனை ஓட்டம்

ஹொங்கொங் 19 வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும், மெல்போர்னில் உடற்பயிற்சி உடலியல் நிபுணராகப் பணியாற்றுபவருமான 24 வயதுடைய ராகுல் சர்மா, சிறுவர் புற்றுநோய் ஆராய்ச்சி நிதிக்காக இலங்கையின் வடக்கு முனையிலிருந்து தெற்கு முனை வரை ஒரு வாரத்தில் ஓடி முடிக்கத் திட்டமிட்டுள்ளார்.

ராகுல் சர்மா தனது ஓட்டத்தை எதிர்வரும் 24 ஆம் திகதி இலங்கையின் வடக்கு முனையான பருத்தித்துறையில் தொடங்கி, 30 ஆம் திகதி தென் முனையான தேவேந்திரமுனையை சென்றடையத் திட்டமிட்டுள்ளார்.

சுமார் 574 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இந்தப் பயணத்தை 07 நாள்களில் கடக்கவுள்ள அவர், நாளொன்றில் சராசரியாக 100 கிலோ மீற்றர் தூரம் ஓடவுள்ளார்.

சிறுவர் புற்றுநோயைக் குணப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு சிட்னியைத் தளமாகக் கொண்டு இயங்கும் "சிறுவர் புற்றுநோய் நிறுவனம்" என்ற அமைப்புக்காகக் குறைந்தது 20,000 அவுஸ்திரேலிய டொலர்களை (சுமார் 13,052 அமெரிக்க டொலர்கள்) திரட்டுவதே இவரது இலக்காகும்.

இதற்காக அவர் கடந்த 18 ஆம் திகதி இலங்கை வந்துள்ளார்.

இந்தியப் பிரஜையான ராகுல் சர்மா, ஹொங்கொங்கில் வளர்ந்ததுடன் 10 வயதில் கிரிக்கெட் விளையாடத் தொடங்கிய அவர், 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் ஹொங்கொங் 19 வயதுக்குட்பட்டோர் அணிக்காக விளையாடியுள்ளார்.

விளையாட்டின் மீதான தனது ஆர்வத்தையும் சமூக சேவையையும் இணைக்கும் வகையில் இந்தச் சவாலை அவர் முன்னெடுத்துள்ளார்.



ராகுல் சர்மா திட்டமிட்டபடி இந்த ஓட்டத்தை நிறைவு செய்தால், 'Erase Poverty' என்ற ஹொங்கொங்கைச் சார்ந்த அறக்கட்டளை 10,000 ஹொங்கொங் டொலர்களை (1,286 அமெரிக்க டொலர்கள்) நன்கொடையாக வழங்க முன்வந்துள்ளது.

# பிரபல பாடசாலை விருது வழங்கல் சர்ச்சை: களமிறங்கிய மனித உரிமை ஆணைக்குழு




இலங்கையின் பிரபல பாடசாலையொன்றின் விருது வழங்கும் நிகழ்வொன்றின் போது இடம்பெற்ற சம்பவம் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் சட்டத்தரணி நிமல் ஜி.புஞ்சிஹேவா கருத்து வெளியிட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழு தற்போது தலையிட்டுள்ளதாகவும், இது தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில நிறுவனங்கள் தங்களிடம் உள்ள அதிகாரத்தை எதேச்சதிகாரமான முறையில் பயன்படுத்த முடியாது.

பாடசாலைகள் உட்பட அனைத்து நிறுவனங்களும் முறையான நடைமுறைகளின்படியே செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

சிறுவர்கள் தொடர்பில் செயற்படும் போது உள்நாட்டுச் சட்டங்கள் மற்றும் சர்வதேச உடன்படிக்கைகளை அரசாங்க நிறுவனங்கள் பின்பற்றக் கடமைப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டை விட இந்த ஆண்டில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

சிறுவர் துஷ்பிரயோகம் என்பது உடல் அல்லது உள ரீதியான பாதிப்பு மட்டுமல்லாது, அவர்களின் கருத்துக்களுக்குச் செவிசாய்க்காமை மற்றும் பங்களிப்பிற்கான வாய்ப்புகளை மறுப்பதும் இதில் அடங்கும்.

கடந்த காலங்களில் மாணவர் தலைவர்கள் நியமனம் மற்றும் பதக்கங்கள் வழங்குவதில் ஏற்பட்ட சிக்கல்கள் குறித்து ஆணைக்குழு விசாரணை நடத்தி பரிந்துரைகளை வழங்கியுள்ளது.

இந்தச் சம்பவத்தில் முறையான விதிமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளதா? அல்லது அதன் மூலம் ஏதேனும் ஒரு மாணவர் அநீதிக்குள்ளாகியுள்ளாரா? என்பது குறித்து ஆணைக்குழு ஆராயும்.

இந்த விடயம் மாணவர்களையும் பாடசாலையின் ஒட்டுமொத்த அமைப்பையும் எவ்வாறு பாதிக்கும் என்பது குறித்து விரிவான விசாரணை நடத்தப்பட்டு, அதன் முடிவுகளின் அடிப்படையில் தகுந்த தீர்மானங்கள் எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

மேலும், இவ்வாறான பாதிப்புகளுக்கு உள்ளாகும் மாணவர்கள் அல்லது பெற்றோர்கள், சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அல்லது மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடுகளைச் செய்ய முடியும் என்றும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

## ‘ஒன்டன்செட்ரோன்’ சர்ச்சை:

# ஆய்வக வசதிகள் தொடர்பில் விளக்குமாறு சஜித் வலியுறுத்தல்



சர்ச்சைக்குரிய “ஒன்டன்செட்ரோன்” ஊசி மருந்துகள் தொடர்பான அனைத்து விபரங்களையும், இலங்கையிலுள்ள ஆய்வகங்களின் தரப் பரிசோதனைத் திறனையும் சுகாதார அமைச்சர் பகிரங்கப்படுத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்து வெளியிட்ட அவர், இந்த ஊசி மருந்துகளின் தரம் குறித்து எழுந்துள்ள சந்தேகங்களை விசாரிக்க உலக சுகாதார அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வகங்கள் இலங்கையில் உள்ளனவா என்று கேள்வி எழுப்பினார்.

சந்தேகத்திற்குரிய இந்த மருந்துத் தொகுதிகளை முறையான ஆய்வுக்கு உட்படுத்துவதற்கான வசதிகள் மற்றும் நிபுணத்துவத்திறன் இலங்கை ஆய்வகங்களுக்கு இருக்கின்றனவா என்பது குறித்து தெளிவான விளக்கம் அளிக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

அத்துடன், அதிநவீன வசதிகளுடன் கூடிய ஆய்வகங்களை அமைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதா என்றும், அதற்கான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளனவா என்றும் அவர் தனது அறிக்கையில் கேள்வியெழுப்பியுள்ளார்.

பொதுமக்களின் சுகாதாரப் பாதுகாப்புடன் தொடர்புடைய இந்த விடயத்தில் சுகாதார அமைச்சர் உண்மைகளை மறைக்காமல் நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.



# உணவு கையாளும் நிலையங்களில் லஞ்ச் சீற் பாவனை முற்றாக தடை

## பருத்தித்துறை நகரசபை அறிவிப்பு

உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்களில் வரும் 1 ஆம் திகதி முதல் லஞ்ச் சீற் பாவனை முற்றாக தடைசெய்யப்படும் எனவும் அதனை மீறும் உணவகங்ககள் உள்ளிட்ட வியாபார நிலையங்களின் வியாபார உரிமம் இடைநிறுத்தப்படும் என்றும் பருத்தித்துறை நகரசபை அறிவித்துள்ளது.

உணவகங்கள் மற்றும் உணவுப் பொருள்களை கையாளும் நிலையங்களின் உரிமையாளர்களுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போது பருத்தித்துறை நகரசபை பொதுச்சுகாதார பரிசோதகர் ப.தினேஷ் இதனை தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை நகரபிதா வின்சென்டீ போல் டக்ளஸ் போல் தலைமையில் பருத்தித்துறை நகரசபை மாநாட்டு மண்டபத்தில் நேற்று திங்கள் கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெற்ற கலந்துரையாடலில் நகரசபை பொதுச் சுகாதார பரிசோதகர், நகரசபை நிர்வாக உத்தியோகத்தர் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது நகரசபை பொதுச்சுகாதார பரிசோதரினால் லஞ்ச் சீற் பாவனை தடை குறித்தும் உணவகங்கள், உணவு கையாளும் நிலையங்களில் பின்பற்றப்பட வேண்டிய சுகாதார நடைமுறைகள் தொடர்பிலும் விளக்கி கூறப்பட்டிருந்தது. 2026 ஆம் ஆண்டு முதல் உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்களில் உள்ளக பயன்பாடு மற்றும் உணவு பொதியிடல் உள்ளிட்ட எந்த செயற்பாடுகளின் போதும் லஞ்ச் சீற் பயன்படுத்த முடியாது எனவும் அவ்வாறு செயற்படுபவர்கள் மீது நீதிமன்றத்தின் ஊடாக நேரடியாக சட்ட நடவடிக்கை மேற்கொள்வதுடன், அதனை மீறி செயற்படும் வியாபார நிலையங்களின் வியாபார உரிமத்தை நகரபிதாவுக்கு உள்ள அதிகாரத்தின் கீழ் இடைநிறுத்தப்படும் என தெரிவித்தார்.

லஞ்ச் சீற் பாவனைக்கு மாற்றீடாக உள்ளக பயன்பாட்டில் வாழை இலை, தாமரை இலை, தேக்கம் இலை போன்றவற்றையும் உணவு பொதியிடலின் போது ஈய பேப்பர் மற்றும் உணவு பொதியிடலுக்காக அனுமதிக்கப்பட்ட கொள்கலன்களை பயன்படுத்துமாறு ஆலோசனை வழங்கப்பட்டது.

அத்துடன், பருத்தித்துறை நகர சபை எல்லைக்குட்பட்ட உணவகங்களின் பயன்பாட்டிற்கு கொள்வனவு செய்யப்படும் இறைச்சி வகைகளை நகரசபைக்கு உட்பட்ட இறைச்சி கடைகளில் இருந்தே பெற்றுக்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

இதன்போது கலால் செய்யப்பட்ட இறைச்சிகளை நகரசபைக்கு வெளியே இருந்துதான் பெற்றுக்கொள்ள கூடியதாக இருப்பதாக முஸ்லிம் உணவக தரப்பினரால் சுட்டிக்காட்டப்பட்ட போது, அவ்வாறான சந்தர்ப்பங்களில் அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களினால் அங்கீகரிக்கப்பட்ட இறைச்சி விற்பனை நிலையங்கள் அல்லது இறைச்சி கூடங்களில் இருந்து கொள்வனவு செய்ய வேண்டும் எனவும் அதற்கான பற்றுச்சீட்டை அவசியம் வைத்திருக்க வேண்டும் எவும் நகர சபை பொதுச்சுகாதார பரிசோதகரினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தக் கலந்துரையாடலின் போது பருத்தித்துறை நகரசபைக்குட்பட்ட உணவகங்கள் மற்றும் உணவு கையாளும் நிலையங்களின் உரிமையாளர்கள், பருத்தித்துறை வர்த்தகர் சங்க நிர்வாகத்தினர் என பலரும் பங்கேற்றிருந்தனர்.











# இந்தியா - நியூசிலாந்து இடையில் தடையற்ற வர்த்தக பேச்சு நிறைவு

## பிரதமர் மோடி அறிவிப்பு



இந்தியா-நியூசிலாந்து இடையேதடையற்ற வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தை நிறைவடைந்ததாக பிரதமர் நரேந்திர மோடி மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவுகளில்,

"இந்தியா - நியூசிலாந்து உறவில், இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டில் இது ஒரு முக்கிய தருணம். இந்தியா - நியூசிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் முடிவடைந்ததை அடுத்து, எனது நண்பர் (நியூசிலாந்து) பிரதமர் கிறிஸ்டோபர் லக்சனும் நானும் சிறிது நேரத்துக்கு முன்பு மிகச் சிறந்த உரையாடலை மேற்கொண்டோம்.

இருதரப்பு தடையற்ற வர்த்தக பேச்சுவார்த்தை தொடங்கி 09 மாதங்களில் முடிவடைந்திருப்பது ஒரு வரலாற்று மைல்கல். நமது இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை ஆழப்படுத்துவதற்கான வலுவான அரசியல் விருப்பம் இதில் பிரதிபலிக்கிறது. மேம்பட்ட சந்தை அணுகல், ஆழமான தொடர் முதலீடுகள் ஆகியவற்றை இந்த தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் உறுதி செய்கிறது. இதனால், புதுமைகளைப் படைப்பவர்கள், தொழில்முனைவோர், விவசாயிகள், சிறு, குறு, நடுத்தர தொழில்கள், மாணவர்கள், இளைஞர்கள் ஆகியோருக்கு ஏராளமான வாய்ப்புகள் உருவாகும்.

இந்தியா-நியூசிலாந்து கூட்டாண்மை புதிய உயரங்களை எட்டப் போகிறது. வரும் ஐந்தாண்டுகளில் இருதரப்பு வர்த்தகத்தை இந்த தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இரட்டிப்பாக்கப் போகிறது. 20 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் நியூசிலாந்தில் இருந்து இந்தியாவுக்கு முதலீடுகள் வரப்போகின்றன. நமது திறமையான இளைஞர்கள், ஸ்டார்ட் அப் சுற்றுச்சூழல், சீர்திருத்தம் சார்ந்த வளர்ச்சி மற்றும் நீண்டகால கூட்டாண்மைக்கு இது வலுவான அடித்தளத்தை அமைக்கப் போகிறது. அதேநேரத்தில், விளையாட்டு, கல்வி, கலாச்சார தொடர்புகள் போன்ற பிற துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்தி வருகிறோம்." என்று குறிப்பிட்டுள்ளார்.

நியூசிலாந்து பிரதமர் கிறிஸ்டோபர் லக்சன் வெளியிட்டுள்ள சமூக ஊடக பதிவில்,

"நியூசிலாந்து - இந்தியா இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து நான் இப்போதுதான் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் பேசினேன். இந்த தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், இந்தியாவுக்கான நியூசிலாந்தின் ஏற்றுமதிகளில் 95 வீத பொருள்களுக்கான வரிகளை குறைக்கிறது அல்லது நீக்குகிறது. வரும் 20 ஆண்டுகளில், இந்தியாவுக்கான நியூசிலாந்தின் ஏற்றுமதி ஆண்டுக்கு 1.1 பில்லியன் டொலர் முதல் 1.3 பில்லியன் டொலர் வரை அதிகரிக்கக்கூடும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக அதிகரிப்பு என்பது நியூசிலாந்து மக்களுக்கு அதிக வேலை வாய்ப்புகள், அதிக ஊதியம், அதிக வாய்ப்புகளைக் கொண்டு வரும். இந்த ஒப்பந்தம், நமது இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான நட்புறவை மேலும் வலுப்படுத்துகிறது. இந்தியா உலகின் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் ஒனறாகும். இது நியூசிலாந்து வணிகங்களுக்கு 140 கோடி இந்திய நுகர்வோரை அணுகும் வாய்ப்பை வழங்குகிறது.

எங்கள் அரசாங்கம் அடிப்படைகளைச் சரி செய்வதிலும், எதிர்காலத்தை உருவாக்குவதிலும் இடைவிடாமல் கவனம் செலுத்துகிறது. இதுபோன்ற புதிய வர்த்தக ஒப்பந்தங்கள் நமது பொருளாதாரத்தை வளர்க்க உதவுகின்றன. இதன் மூலம் அனைத்து நியூசிலாந்து மக்களும் முன்னேற முடியும்." என தெரிவித்துள்ளார்.

# டில்லியில் தொடரும் கடும் பனி மூட்டம்

## 100 விமானங்கள் தாமதம்



டில்லியில் 7 ஆவது நாளாக நேற்றும் கடும் பனிமூட்டம் நிலவியது. இதனால், விமானப் போக்குவரத்து மற்றும் ரயில் போக்குவரத்து நேற்றும் பாதிப்புக்கு உள்ளானது.

டில்லியில் நேற்று சராசரி காற்றுத் தரக் குறியீடு 366 ஆக இருந்தது. இது மிகவும் மோசமான நிலையில் வகைப் படுத்தப்பட்டுள்ளது. மேலும், டில்லி நகரின் பல இடங்களில் காற்று மாசுபாடு அளவு "கடுமையான" பிரிவில் இருந்தது. நரேலாவில் காற்று தரக் குறியீடு 418 ஆக பதிவு செய்யப்பட்டது.

ஆனந்த் விஹார், பவானா, ஜஹாங்கீர்புரி, முண்ட்கா, ரோஹினி மற்றும் வஜிர்பூர் போன்ற பகுதிகளிலும் 401 முதல் 408 வரையிலான "கடுமையான" ஏக்யூஐ அளவுகள் பதிவு செய்யப்பட்டன.

டில்லியின் இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் காட்சித் தெளிவின்மை காரணமாக, விமானப் பயணிகளுக்கான அறிவுறுத்தலை விமான நிலையம் வெளியிட்டது. நேற்று திங்கள் கிழமை டில்லி விமான நிலையத்தில் 150 இற்கும் மேற்பட்ட விமானங்கள் தாமதமாகியுள்ளன.

மேலும், புதுப்பிக்கப்பட்ட விமானத் தகவல்களுக்குஅந்தந்தவிமானநிறுவனங்களைத் தொடர்பு கொள்ளுமாறு பயணிகளுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# மதுபான விற்பனை அனுமதிப்பத்திரங்கள் ஏலத்திற்கு வரும் 1000 கோடி ரூபாவுக்கு அதிகமான வருமானம் எதிர்பார்ப்பு



கர்நாடக மாநில வரலாற்றில் முதன் முறையாக, பயன்படுத்தப்படாத மதுபான விற்பனை அனுமதிப்பத்திரங்களை மின்னணு ஏலமுறை (e-auction) ஊடாக வழங்குவதற்கு அம்மாநில அரசு தீர்மானித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி, 1965ஆம்ஆண்டுகர்நாடக மாநில மதுவரித் திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், முதல் தடவையாக பயன்படுத்தப்படாத மற்றும் வழங்கப்படாத சில்லறை மதுபான அனுமதிப்பத்திரங்களை வெளிப்படையான மின்னணு ஏலத்தின் மூலம் ஒதுக்கீடு செய்ய கர்நாடக மாநில முதலமைச்சர் சித்தராமையா தலைமையிலான அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த ஏலத்தின் மூலம் மாநில அரசுக்கு சுமார் 1,000 கோடி ரூபா மேலதிக வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மொத்தம் 569 அனுமதிப்பத்திரங்கள் ஏலம் விடப்படவுள்ளன. இதில் 477 சில்லறை மதுபானக் கடைகளுக்கான (CL-2A) அனுமதிப்பத்திரங்களும், 92 பார் மற்றும் உணவகங்களுக்கான (CL-9A) அனுமதிப்பத்திரங்களும் அடங்கும்.

அவற்றில் அதிகபட்சமாக பெங்களூரு மாவட்டத்திலுள்ள 8 மதுவரி வலயங்களில் 182 அனுமதிப்பத்திரங்கள் ஏலம் விடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஏலத்தில் பங்கேற்க விரும்புவோர் MSTC Limited மின்னணு தளத்தில் பதிவு செய்ய வேண்டும்.

அத்தோடு, ஒருமுறை பதிவுக்கட்டணமாக 1,000 ரூபாயும் (GST உடன்), விண்ணப்பக் கட்டணமாக (மீளப் பெற முடியாதது) 50,000 ரூபாயும் செலுத்த வேண்டும் எனவும், ஏலதாரர்களுக்கான பதிவுகள் இன்று ஆரம்பமாகியுள்ளதாகவும்,நேரடி மின்னணு ஏலமானது 2026 ஜனவரி 13 முதல் ஜனவரி 20 வரை நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், முதலமைச்சர் சித்தராமையா கடந்த மார்ச் மாதம் சமர்ப்பித்த 2025-2026 பாதீட்டில் இந்த முறையை முன்மொழிந்திருந்தார்.

அவற்றில் மதுவரி விதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து தற்போது இந்த ஏல அறிவிப்பு உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# மற்றொரு மாணவர் தலைவர் மீது மர்ம நபர்களால் துப்பாக்கிச் சூடு!

## பங்களாதேஷில் தொடரும் பதற்றம்




பங்களாதேஷில் மாணவர் தலைவரான மொட்டலேப் ஷிக்தர் என்பவரை அடையாளம் தெரியாத நபர்கள் துப்பாக்கியால் தலையில் சுட்டதில் அவர் பலத்த காயமடைந்துள்ளார். ஆபத்தான நிலையில் அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு பங்களாதேஷில் ஷேக் ஹசீனா பிரதமர் பதவியில் இருந்து விலக காரணமாக இருந்த மாணவர் போராட்டத்தில் முக்கியப் பங்கு வகித்த ஷெரீப் உஸ்மான் ஹாடி என்ற மாணவர் தலைவர், கடந்த 12 ஆம் திகதி சைக்கிள் ரிக்ஷாவில் செல்லும்போது, மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து வந்த முகமூடி அணிந்த மர்ம நபர்கள், அவரின் தலையில் சுட்டுவிட்டு தப்பினர். டாக்கா மருத்துவமனையிலும், பின்னர் சிங்கப்பூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர், சிகிச்சை பலனின்றி சில நாள்களுக்கு முன்பு உயிரிழந்தார். இதையடுத்து, பங்களாதேஷில் பெரும் கலவரம், வன்முறை சம்பவங்கள் நடந்தன.

இந்நிலையில், மொட்டலேப் ஷிக்தர் (வயது 32) என்ற மற்றொரு மாணவர் தலைவர் மீது இன்று துப்பாக்கிச் சூடு நடந்துள்ளது. தேசிய குடிமக்கள் கட்சியின் தொழிலாளர் முன்னணியின் மத்திய ஒருங்கிணைப்பாளரான இவர் பணியாற்றி வந்துள்ளார்.

இந்நிலையில், குல்னா நகரின் மஜித் சரணி பகுதியில் ரிக்ஷாவில் சென்று கொண்டிருந்தபோது அடையாளம் தெரியாத நபர்கள் இவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி உள்ளனர். தலையில் பலத்த காயமடைந்த மொட்டலேப் ஷிக்தர், ஆபத்தான நிலையில் குல்னா மருத்துவக் கல்லூரி மருத்துவனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

ஷிக்தரின் தலையின் இடது பக்கத்தில் சுடப்பட்டதாகவும், இதனால் அதிக ரத்தப் போக்கு இருந்ததாகவும், மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பங்களாதேஷ் செய்தித்தாள் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தை அடுத்து குற்றவாளிகளைக் கண்டறிய பொலிஸார் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.





# மொஸ்கோவில் கார் குண்டுவெடிப்பு: ரஷ்யாவின் முக்கிய அதிகாரி பலி

உக்ரைன் நேட்டோ நாடுகள் இணைவதை எதிர்த்து கடந்த 2022 பெப்ரவரியில் ரஷ்யா தொடங்கிய போர் தீர்வு எடுக்கப்படாமல் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்தநிலையில் ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் கார் குண்டுவெடிப்பில் ரஷ்யாவின் ஆயுதப் படைகளின் செயல்பாட்டுப் பயிற்சித் துறையின் லெப்டினனட் ஜெனரல் ஃபானில் சர்வரோவ் உயிரிழந்துள்ளார்.




இந்த சம்பவத்திற்கு உக்ரைன் உளவுத்துறையின் தொடர்பு இருக்கலாம் என்று ரஷ்ய அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த சில ஆண்டுகளில் ரஷ்யாவின் உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் இலக்கு வைக்கப்படும் தொடர்ச்சியான தாக்குதல் சம்பவங்களின் ஒரு பகுதியாக இது பார்க்கப்படுகிறது.

தற்போது ரஷ்யப் புலனாய்வுக் குழுவினர் இந்தச் சம்பவம் குறித்து தீவிரமான விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.









# இன்றைய ராசி பலன்கள்- 23.12.2025




இன்று நீங்கள் அதிகப் பணியில் மூழ்கி இருப்பீர்கள். புதிதாக ஒன்றை அடைவதில் உறுதியாக இருப்பீர்கள். கடினமாக உழைப்பதன் மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறந்த செயல்திறன் ஆற்ற சாதகமாக இருக்கும். உங்கள் வேலைத் தரம் உங்களின் திறமையை பறைசாற்றும். நீங்கள் பணி சம்பந்தமான சந்திப்பில் கலந்து கொள்வீர்கள். உங்கள் கருத்துக்களை தெளிவாக கூறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். எதிர்கால முடிவுகளைப் பற்றி கலந்தாலோசித்து பரஸ்பரம் ஒரு முடிவுக்கு வருவீர்கள்.

உங்கள் கடின உழைப்பின் மூலம் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் வகையில் பண வரவு காணப்படும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும் என்றாலும் உறுதியுடனும் கவனமுடனும் செயல்பட்டு அதனை சமாளித்து வெற்றி காண்பீர்கள்.

வேலை தொடர்பான பயணம் காணப்படும். பயணம் கடினமாக இருக்கும் மற்றும் நீங்கள் சில அதிருப்தியான சூழ்நிலையை சந்திப்பீர்கள்.

உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்வதன் மூலம் இருவரும் நல்லுறவை பராமரிக்கலாம்.

இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். இன்று செலவுகள் அதிகம் காணப்படுவதால் சேமிக்க இயலாது.

இன்று பதற்றம் காணப்படும். எனவே இன்று இதனை தவிர்த்தல் சிறந்தது.




இன்று உங்கள் செயல்களில் கவனமாக இருக்க வேண்டியது அவசியம். எதிர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்ளாதீர்கள். நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் இருங்கள்.

பணியிடத்தில் அமைதியான சூழ்நிலை காணப்படாது. சக பணியாளர்கள் மற்றும் உங்கள் மேலதிகாரிகள் உங்களை புறக்கணிப்பது போலவும் தவிர்ப்பது போலவும் உணர்வீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துனையிடத்தில் பொறுமையின்மையும் கவனமற்ற வார்த்தைகளும் இருவருக்குமிடையே மகிழ்ச்சியற்ற தன்மையை ஏற்படுத்தும். இத்தகைய நடத்தையை தவிர்ப்பதன் மூலம் மகிழ்ச்சியை அனுபவிக்கலாம்.

பணப்புழக்கம் குறைவாக இருக்கும்.




இன்றைய நாள் உங்களுடைய இலக்குகளை அடைய சரியான முயற்சி எடுக்க உகந்த நாள். உங்கள் செயல்களை எளிதாக செய்வீர்கள். உங்கள் உறுதி மற்றும் தைரியம் மூலம் வெற்றி பெறுவீர்கள்.

பணியிடத்தில் நன்மை கிடைக்கும். உங்கள் செயல்திறன் உங்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கும்.

நீங்களும் உங்கள் துணையும் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவிப்பீர்கள். இதனால் மிகுந்த திருப்தி ஏற்படும்.

நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். நல்ல சேமிப்பு நிலையை பராமரிப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக கானபட்டும்.




இன்று கடினமான சூழ்நிலைகளை கையாளும்போது கவனமாக இருக்க வேண்டிய நாள். இன்று கோபம் மற்றும் பதட்டத்திற்கு ஆளாவீர்கள். அமைதியும் நம்பிக்கையும் கொள்ள வேண்டும்.

பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்காது.

உங்கள் கோபத்தை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க நீங்கள் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் குறைவாக இருக்கும். தேவையற்ற செலவுகள் கவலையை உண்டாகும்.

அசௌகரியம் காரணமாக ஆரோக்கியம் பாதிக்கப்படும்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். மகிழ்ச்சியை தக்க வைக்க நீங்கள் சிறப்பாக செயல்பட வேண்டும்.

பணியின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. திட்டமிட்டு பணியாற்றுவது விளைவுகளை மேம்படுத்த உதவிகரமாக இருக்கும். சக பணியாளர்களுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.

நீங்கள் விஷயங்களை தீவிரமான போக்கில் எடுத்துக் கொள்வதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கப்படும். இனிமையான வார்த்தைகளைப் பேசுவதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணபுழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். நீங்கள் வெற்றி பெறுவதற்கு நம்பிக்கையுடன் இவைகளை சமாளிக்க வேண்டும்.முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பனியின் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது. திட்டமிட்டு அட்டவணையிட்டு பணியாற்றுவது அவசியம்.

உங்கள் துணையுடன் வாக்குவாதம் செய்ய முற்படலாம். அமைதியான போக்கை மேற்கொண்டு உறவில் நல்லிணக்கத்தை தக்க வையுங்கள்.

பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. பதட்டம் காரணமாக தலைவலி ஏற்படலாம்.




இன்று வெற்றிகரமான நாளாக இருக்கும். இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி பெற அதிக முயற்சி எடுக்க வேண்டும். இன்று ஓய்வின்றி செயலாற்றுவீர்கள். செயல்களை எளிதாக கையாள்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

உங்கள் பணிகளை திறம்பட செய்து முடிப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அமைதியாக நடந்து கொள்வீர்கள். நீங்கள் இருவரும் சேர்ந்து பொழுதுபோக்கு விஷயங்களை கண்டு மகிழ்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள்- 23.12.2025




இன்று உங்கள் திட்டங்களில் பலன் கிடைக்கும் இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

பணியிடச் சூழல் சிறந்த முறையில் செயலாற்றும் வகையில் இருக்கும். உங்கள் பணியில் திருப்தி அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பையும் புரிந்துணர்வையும் பகிர்ந்து கொள்வீர்கள். உங்களின் இந்த சகஜமான போக்கு உங்கள் துணையை மகிழ்விக்கும்.

நிதிநிலைமை இன்று சாதகமாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். சிறப்பாக திட்டமிடுதல் மற்றும் யுக்திகளை கையாள்வதன் மூலம் வெற்றி பெறலாம். அமைதியாக இருந்து பதற்றத்தை தவிர்ப்பதன் மூலம் நன்மை கிடைக்கும்.

பணிகளை முன்கூட்டியே திட்டமிடுவதன் மூலம் தவறுகள் நேராமல் தடுக்கலாம். இதனால் உங்கள் பனியின் தரம் உயரும்.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதன் மூலம் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்ளலாம். வேறு விதமாக செயல்பட்டால் குழப்பமும் பதட்டமும் ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. என்றாலும் பூர்வீகச் சொத்து மற்றும் எதிர்பாராத வகையில் பணம் கிடைக்கும்.




இன்று தேவையற்ற மனக் குழப்பங்கள் சுமையாக இருக்கும். நம்பிக்கையுடன் இருந்தால் நன்மை காணலாம்.

உங்கள் பணியில் தவறுகள் நேரும். கவனமாக பணியாற்றினால் சிறப்பாக செயலாற்றலாம்.

உங்கள் துணையிடம் குழப்பமான மன நிலையை வெளிப்படுத்துவீர்கள். மனதை அமைதியாக வைத்துக் கொண்டு உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை அனுபவியுங்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண இழப்பின் காரணமாக ஏமாற்றம் நிறைந்து காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது




இன்றைய நாளைக் கையாள்வது கடினமாக இருக்காது. வளர்ச்சி குறித்து சுதந்திரமாக முடிவெடுக்கும் உறுதியான மனநிலை காணப்படும். சிறிது முயன்றால் வெற்றி காணலாம்.

பணியிடத்தில் சிறந்த நிலையில் இருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.இதனால் இருவரிடையேயான புரிந்துணர்வு வலுப்படும்.

இன்று பண வரவு காணப்படும். அதிர்ஷ்டம் காணப்படும். இன்று பணத்தை சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.





# உடப்பு காளி கோவிலை கடல் கொள்ளும் ஆபத்து

(உடப்பு க.மகாதேவன்)

அண்மையில் ஏற்பட்ட 'டித்வா' புயல் வெள்ளம் காரணமாகப் புத்தளம் மாவட்டத்தின் உடப்பிலுள்ள 'அறுவாய்' பகுதி திறந்து கடலுக்கு நீர் செலுத்தப்பட்டது. தற்போதும் அந்த நீர் கடலுக்குச் சென்ற வண்ணம் உள்ளது.

இதன் காரணமாகக் காளிகோவில் அருகிலுள்ள கடலோரப் பகுதி,கடலரிப்பு ஏற்பட்டு பலத்த சேதத்தை உண்டாக்கியுள்ளது.

இதனால் தற்போது கடல், கோவிலை ஆக்கிரமித்த வண்ணம் உள்ளது. தற்போது காற்றின் வேகத்தால் இன்னும் சில மாதங்களில் இந்தப் பகுதியைக் கடல் ஆக்கிரமித்து, பேரழிவை ஏற்படுத்தும் என இவ்வூர் மக்கள் அஞ்சுகின்றனர்.

அண்மையில் கடற்றொழில் அமைச்சர் வருகை தந்த போது இதனைப் பார்வையிட்டுச் சென்றுள்ளார். மேலும் இவ்வூரின் இந்து ஆலய பரிபாலன சபை மற்றும் ஊர் மக்கள் சேர்ந்து மண் மூடைகள் பிற சாதனங்கள் கொண்டு தற்காலிகமாக தடுப்பு ஒன்றை முன்னெடுத்துச் செயற்பட்டனர்.

இருந்தும் இதற்குரிய நிரந்தரத் தீர்வை அரசாங்கம் பெற்றுத்தர வேண்டுமென சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.